விலை ரூபா 1–25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 மாசி 12 ஜ- ஆகி 2 இதழ் 13
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 23-2-1985

ஞானச்சந்திரன் கடத்தப்பட்டார்

நேற்றுவரை தகவல் இல்லை

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு.கே.ஞானச் சந்திரன் நேற்றுக்காலை இனந்தெரியாத நபர்களினுல் கடத்திச் செல்லப்பட்டார்.

நேற்றுக்காலை இ. போ. ச. பஸ் ஒன்றில் முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம்நோக்கி வந்துகொண்டிருந்தபோது இவர் கடத்தப்பட்டார்.

அரசாங்க அதிபர், அவரது மகள், முல்லைத்தீவு திட்டமிடல் அதிகாரி திரு.கிருபதிலிங்கம் ஆகியோர் இ போ ச. பஸ் ஒன்றில் முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தனர்.

முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் பரந்தனுக்கு அண்மையில் 'டெலிகா' வான்ஒன்றில்வந்த இனந்தெரியாத நபர்கள் பஸ்ஸை மறித்து, இம்மூவரையும் இறக்கி அரசாங்க அதிபரை வானில் ஏற்றியதாகவும்

(6ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

கண்ணிவெடி: 7 பொலிஸார் பலி!

(கொழும்பு)

வீதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியினுல் எட்டுப் பேர் பலியானார்கள். இவர்களில் ஏழு பேர் பொலிசாராவர்.

ராஜாங்க அமைச்சு நேற்று இரவுவிடுத்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

''பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும் ஆறு பொலிஸ் கான்ஸ்டபிள்மாரும், பொதுமக்களில் ஒருவரும் ஜீப்பில் சென்றுகொண்டிருந்தபோது கண்ணிவெடிகளினுல் பலியானார்கள்.

''பலியான பொலிஸார் வடக்கில் வேலை செய்பவர்கள். சம்பளப்பணத்தைப் பெறுவதற்காக அவர்கள் ஜீப்பில் சென்றுகொண்டிருந்தனர்.''

கடத்தப்பட்ட இன்ஸ்பெக்டர்கள்:

பணயப்பணத்தின் பகுதியை வழங்க மனிதவிமார் இணக்கம்

(கொழும்பு)

''கடத்திச் செல்லப்பட்டுள்ள எமது கணவர்களை விடுதலை செய்வதற்கு கேட்கப்பட்டுள்ள பணயப் பணத்தின் ஒரு பகுதியை கொடுக்க நாங்கள் தயாராகவுள்ளோம். இதுசம்பந்தமாக எம்முடன் பேச்சுவார்த்தை நடத்த ஒருவரை ஏற்பாடு செய்து தாருங்கள்.''

இனந்தெரியாத நபர்களினுல் கடத்திச் செல்லப்பட்டுள்ள பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் நாணயக்கார, டெரன்சில்வா ஆகியோரின் மனைவிமார்கள் இருவரும் கூட்டாக

(5ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

இனப்பிரச்னைக்குக் காரணம்

"தமிழரின் சமத்துவத்தை சிங்களவர்கள் ஏற்கவில்லை!"

அனில் முனசிங்க கூறுகிறார்

[கொழும்பு]

''தமிழ் மக்கள், சட்ட ரீதியாகவும், மெய்ம்மை ரீதியாகவும் சரிசமமாக இந்நாட்டில் வாழ விரும்பினர். ஆனுல் சிங்களவர்கள் இதற்கு அனுமதிக்கவில்லை. ஆகையினுலேயேஇன்று இனப்பிரச்னை வலுவடைந்துள்ளது'' என்று ஸ்ரீ ல. சு. க. எம். பி. திரு. அனில்முனசிங்க தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு மீதான விவாதத்தின்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

திரு முனசிங்க மேலும்கூறியதாவது: ''திரு ஜி ஜி. பொன்னம்பலம் சிங்கள மக்களுடன் சரிசமமாக வாழ '50க்கு 50' என்ற கோரிக்கையை முன்வைத்தார். ஆனுல் சிங்கள மக்கள் இதனை ஏற்க மறுத்தனர்.

''மொழி ரீதியாகவும் சம உரிமைபெற முயற்சித்தனர்.

(6ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

அமெரிக்க அதிகாரி கூறுகிறார்

"இலங்கையும் இந்தியாவும் பேசித் தீர்க்கவேண்டும்!"

[வாஷிங்டன்]

''இலங்கையில் இனங்களுக்கிடையிலான உறவுகள் மேலும் மோசமடைந்து வருகின்றன. 1983 ஜூலை மாதத்தில் ஏற்பட்ட கலவரங்களைத் தொடர்ந்து இலங்கையில் வன்செயல்கள் வெடித்தன. கடந்த 6 மாதங்களில் வடபகுதியில் அதிகமான வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன இதில் இரு இனங்களைச் சேர்ந்த பர்களும் பெருமளவில் இறந்துள்ளனர்''

இவ்வாறு அமெரிக்காவின் அண்மை கிழக்கு, தெற்காசியா அலுவல்களுக்கு பொறுப்பான அரசாங்கப் பிரிவு உதவிச் செயலாளர் ரூபேட் ஏ பெக் கூறியுள்ளார். இவர் அமெரிக்க நிர்வாகத்தின்

(5-ம் பக்கம் 5-ம்கலம் பார்க்க)

வட்டக்கண்டலில் ஆண்கள் பெருமளவில் சுட்டுக்கொலை!

சபையில் சரத் தகவல்!!

[கொழும்பு]

''மன்னுரிலுள்ள வட்டக்கண்டல் கிராமத்தில் ஆண்கள் பெருமளவில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். என்னைச் சந்தித்த அப்பகுதிப் பெண் ஒருவர் தமது சகோதரி விதவையாகிவிட்டார் என்று கூறினுர் இவை தவிர வேறு பல சம்பவங்கள்பற்றியும் எனகுத் தகவல்கள் கிட்டியுள்ளன'' என்று

(5ம்பக்கம் 5ம் கலம் பார்க்க)

ஆசிரியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

முன் அறிவித்தபடி ஆசிரியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளும் ஓய்வூதியப் பணமும் சனியும் ஞாயிறும் குருநகர் இலங்கை வங்கியில் வழங்கப்படும் என்று முகாமையாளர் தெரிவித்தார்.

அவசரகாலம் நீடிப்பு

(ஸ்ரீ ஜயவர்த்தனபுர)

அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இந்நீடிப்புப் பிரேரணைக்கு ஆதரவாக 126 உறுப்பினர்கள் வாக்களித்தனர் கலவானத் தொகுதி

(2ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

இருவர் காயம்

[யாழ்ப்பாணம்]

துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகிய இருவர் யாழ் ஆஸ்பத்திரியில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த நிக்கலஸ் தேவதாஸ் (46வயது) என்பவரும் கிளிநொச்சி கண்டிரோட்டைச் சேர்ந்த மாணிக்க

(6ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

வாகனத்தை ஒப்படைக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கன்னுதிட்டி வீதியிலுள்ள ஹோம் பினன்ஸ் ஸ்தாபனத்திற்குச் சொந்தமான வான் இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது இந்த வாகனம் பொது மக்களின் பணத்தை கொண்டே வாங்கப்பட்டது.

(6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

கொழும்பு — தூத்துக்குடி ஆரம்பமானுல்

தலைமன்னுர் - இராமேஸ்வரம் கப்பல்சேவை தடைப்படும்!

(கொழும்பு)

கொழும்பு — தூத்துக்குடி பிரயாணிகள் கப்பல் சேவை இந்திய அரசாங்கத்தின் அனுமதி கிடைத்தவுடன் வரைவில் ஆரம்பிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தப் புதிய கப்பல்சேவை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் இராமேஸ்வரம் — தலைமன்னுர் கப்பல்சேவை முற்றுக நிறுத்தப்படுமென்று அறியப்படுகிறது.

கொழும்பு — தூத்துக்குடி கப்பல்சேவை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் இலங்கையின் எப்பகுதியிலிருந்தும் மக்கள் வந்து தங்குவதற்கு சகல பாதுகாப்பு ஏற்பாடுகளும்

(6-ம் பக்கம் 3-ம் கலம் பார்க்க)

சட்டத்தரணி வீட்டில்....

[யாழ்ப்பாணம்]

யாழ் பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி திரு. ஆர். பாலசுப்பிரமணியத்தின் வீடு நேற்று மாலை சிறிது நேரம் அல்லோலகல்லோலப் பட்டது!

இதன் எதிரொலியாக அப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது.

(5ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

இடையூறின்றி ஜி. ஸி. ஈ. பரீட்சை: பிரஜைகள் இணைப்புக்குழு மகிழ்ச்சி

[ஏ. வி. மாணிக்கம்)

''மீளநடத்தப்பெறும் கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சை எவ்வித இடையூறும் இன்றி நடைபெற்று நிறைவுறவேண்டுமென்று சகலரும் வேண்டிய நடவடிக்கை எடுப்பதை பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழு மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது.''

நேற்று நடைபெற்ற பிரஜைகள் குழுக்களின் கூட்டத்தின் பின், இணைப்புக்குழு விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டம் யாழ். மாநகர சபையின் ஆலோசனை மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் 28 குழுக்களும், கிளிநொச்சி, வவுனியா பிரதிநிதிகளும் இக்கூட்

(6-ம் பகுதம 1-ம் கலம் பார்க்க)

கூடுதல் அதிகாரங்களுடன் வீரதுங்கா கடமையேற்றார்

[கொழும்பு]

முப்படைகளினதும் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள லெப்டினன்ட் ஜெனரல் திஸ்ஸ வீரதுங்க கூடுதல் அதிகாரங்களுடன் நேற்றுத் தமது கடமையைப் பொறுப்பேற்றார்

கொழும்பில் பிரிட்டிஷ் காலத்தைச் சேர்ந்த கட்டிட

(6ம்- பக்கம் 2-ம் கலம்பார்க்க)

ப. நோ. கூ. ச. தலைவர் கடத்தப்பட்டார்

(வேலணை)

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் திரு. நா. பாலச்சந்திரன் இனம்தெரியாத இரு ஆயுதர் கோஷ்டியொன்றினுல் நேற்றிரவு கடத்திச் செலலப்பட்டார்.

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர் ஒருவர் வீட்டிலிருந்தபோதே இவரை வானில் கடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இவர் கடத்தப்பட்டதை எதிர்த்து வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் நேற்று அடையாள வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொண்டனர்.

அரிவளம்பரம்

விற்பனைக்கு

யூரியா உரம் விற்பனைக்குண்டு. M. G. M. For age Stores, No 208, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 22611 1839

மின்சார உபகரணங்கள் உட்பட பலதரப்பட்ட வீட்டுச் சாமான்கள் உடனடியாக விற்பனைக்கு உண்டு. அன்ரனிப்பிள்ளை, 9/3, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம் 1964

FRIZER ஐஸ்பழ மெஷின், பெட்டிகள், வான், Deep Frizer லைற் என்ஜின் என்பன (பாவித்தவை) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S கண்ணன், 25, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். T'phone: 22160 1953

No. 1 Huller English மோட்டர் (30 H.P., English) ஸ்ராட்டர் உடனடி விற்பனைக்குண்டு. தொடர்பு: அம்பாள் மில்ஸ், மணற்காடு, காரைநகர். 1921

கோப்பாய் மத்தி நாவலடியில் வீடு கட்ட உகந்த இடம் 44 பரப்பு வயல்காணி விற்பனைக்குண்டு. விபரம் :- முத்துக்குமாரசுவாமி வன்னிய சேகரம், கல்வளவு, கோப்பாய். 1948

நல்ல நிலையில் உள்ள T. V Set 20 ' கலர்ரி வி. National M 211. (2) Video Cazette Recorder—வீடியோ டெக் National 2000. (3) குளிர் சாதனப் பெட்டி Sisil 280. (4) புத்தம் புதிய Gas Cooker 'ராஜகம்' சம்பியன் ஒழுங்கை, கொக்குவில். 1938

வீடடுப்பாவனைப் பொருட்கள் Carpet, Kenwood, [Major] ஐந்து இணைப்புகளுடன், Vacuum cleaner, ஐந்து அடுப்புகளுடனும், Oven உடனும் Gas Cooker, மற்றும் பலவித உபகரணங்கள் உடன் விற்பனைக்குண்டு. கிருபாகரன், C/O சிவமுத்துலிங்கம், முதலியார் வளவு, தலையாளி, கொக்குவில். 1860

முதல்தரமான விஜிதா நம் 1 நாட்டரிசி கல்லில்லாமல் கைதேர்ந்த தொழிலாளர்களினால் கல் அரித்து தயாரிக்கப்படுபவை வர்த்தகர்கள் விரும்பி விற்பனை செய்வதும் பாவனையாளர்கள் கேட்டு வேண்டுவதும் விஜிதா நம் 1 நாட்டரிசி. தயாரிப்பாளர்களும் வினியோகஸ்தர்களும்; விஜிதா அரிசி ஆலை, தாவடி தெற்கு, கொக்குவில். 1909

சகலவிதமான ஹோட்டல் தளபாடங்களும் உடன் விற்பனைக்கு உண்டு. விபரம் கீழ் வருமாறு: (1) டி பிறிசர் ஐஸ் பெட்டி (2) திண்டுக்கல் இரும்புப்பெட்டி (3) சீலிங் விசிறிகள் (4) மேசை விசிறிகள் (5) பெரிய கவுண்டர்கள் (6) சோ கேஸ் வகைகள் (7) குசினி தளபாடங்கள் (8) சாப்பாட்டு மேசைகள் மற்றும் ஏனைய ஹோட்டல் தளபாடங்கள் அடங்கியயாவும். நேரில் பார்வையிடவும். கா. பாலகிஸ்ணபிள்ளை, மின்சாரநிலையம், ஸ்ரேசன் ரோட், மாங்குளம். 1941

விற்பனைக்கு

1½ வயது நல்ல இன பெண் அல்சேசன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. 'ராஜகம்' சம்பியன் லேன், கொக்குவில் 1939

வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் வீதியில் 1½ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. மிகச் சிறந்த சுற்றாடல். நேரில் தொடர்பு:- தம்பிஐயா விறகுகாலை, 46, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. 1956

கோண்டாவில் கிழக்கு அரசடிப் பிள்ளையார் அருகாமையில் பனங்காணி மலிந்த விலையில் விற்பனைக்கு உண்டு. பரப்பு ஒன்று ரூபா 50,000/-. தொடர்பு: த. சிவபாலன், இருபாலை வீதி, கோண்டாவில். 1958

நஷனல் NV 2000 EN வீடியோ டெக், குறைந்த கால பாவிப்பு, உடன் விற்பனைக்குண்டு. S. துரைஐயா மாஸ்டர், வேதக் கோவிலடி, குளப்பிட்டி, கொக்குவில். 1968

தேவை

இரும்புக்கடை வியாபாரம் பத்து வருடத்திற்கு மேல் அனுபவம் உடைய ஆங்கில அறிவுள்ள ஒருவர் தேவை. நேரில் வரவும். 68, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1957

கச்சேரி சுற்றாடலில் 3 பேர் வசிக்கக்கூடிய பகுதி வீடு வாடகைக்குத் தேவை, அல்லது 769 பஸ் பாதையிலும் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 1955, C/o ஈழநாடு லிமிட்டெட். 1955

பாண், பணிஸ், கேக் முதலியன செய்வதில் அனுபவமுள்ள பேக்கர்கள் தேவை. நேரில் வரவும். மலேயன் ரேடியோ சேவிஸ், 45, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். போன்; 23885. 1969

கிளிநொச்சி பால் சபையின் பால் பதனிடும் தொழிற்சாலைக்கு கல்வித் தகைமையும், அனுபவமுள்ள ஓர் BOOK-KEEPER கணக்குப் பதிவேட்டாளரும், நல்ல அனுபவமுள்ள 40 வயதிற்கு மேற்பட்ட லொறிச் சாரதியும் தேவை விண்ணப்பதாரர்கள் தகைமைச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளுடன் எதிர்வரும் 27ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம்தரவும். அன்றைய தினம் மேற்படி பதவிகளுக்கான தத்தமது விண்ணப்பங்களைச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் சமர்ப்பித்தல் அவசியம். முகாமையாளர், பால் பதனிடும் தொழிற்சாலை, கிளிநொச்சி. 1871

FOR SALE

T. V. Decks AKKAI AUDIO System, Microwave Oven, HITACHI 2 in one KENWOOD CHEF Shanmugam Textiles, 52, Adiyapatham Road, Nallur Market, Kalviankadu. 1965

'டெய்லி நியூஸ்' செய்தி

வண. மேரி பஸ்ரியன் உயிருடன் இருக்கிறாராம்

[கொழும்பு]

வங்காலையில் ஆயுதப்படையினரால் கொலை செய்யப்பட்டவரான பங்குக்குரவர் பிதா. மேரி பஸ்ரியன் தென்இந்தியாவில் உயிருடன் இருக்கிறாராம்.

ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் ''கத்தோலிக் அட்வகேட்'' என்ற பத்திரிகையை மேற்கோள்காட்டி ,'டெயிலி நியூஸ்'' பத்திரிகை இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

ஜனவரி 31-ந் திகதிய மேற்படி ஆஸ்திரேலியா பத்திரிகை வத்திக்கான் வானொலியை மேற்கோள்காட்டி இச் செய்தியை வெளியிட்டிருக்கிறதாம்.

கொழும்பு ஆர்ச்பிஷப் காரியாலயத்தைச் சேர்ந்த பிதா பேட்ரம் தப்ரேரா இதுபற்றி கருத்துவெளியிடுகையில் பிதா மேரி பஸ்ரியன்பற்றி தங்களுக்கு எதுவித தகவலும் இல்லையென்று குறிப்பிட்டார். வண. மேரி பஸ்ரியான் சில நாட்களுக்குமுன் மன்னார்கடற்கரைப்பகதியில் காணப்பட்டதாகவெளிவந்த உறுதிப்படுத்தப்படாத செய்திகளையடுத்து அவர் உயிருடனிருக்கலாம் என்று மட்டும் கருதப்பட்டதாக அவர்தெரிவித்துள்ளார்.

வங்காலையில் ராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் ஒன்றின்போது தேவாலயத்தில் இருந்த பிதா. மேரிபஸ்ரியன் சுட்டுக்கொல்லப்பட்டதாகக்குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது. இதை ராணுவத்தினர் மறுத்துள்ளனர்.

(பெ)

தவறிவிட்டது

J. யூட் ஆனந்தராஜ், டச்ரோட்' அளவெட்டி என்பவரின் அடையாள அட்டை 19-02-85ல், சுன்னாகம் நாகம்ஸ் ஸ்ரோர்ஸ் அருகாமையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் S. சந்தான சாமி, சக்தி அச்சகம், Dr. சுப்பிரமணியம் ரோட், சுன்னாகம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1954

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றம்

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மரணசாதனம் ஏதும் எழுதாது காலஞ்சென்ற புலோலி தெற்கு கதிர்காமர் சுப்பர் மார்க்கண்டுவின் சொத்து விடயமாக

1. கதிர்காமர் சுப்பர் தியாகு.
புலோலி தெற்கு
மனுதார்.

வழ. இல: T/1206

மேற்குறித்த இலக்கம் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்குறித்த நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் அல்லது ஆட்கள் எவரும் 1985-ம் ஆண்டு தை மாதம் 11-ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாது என்பதற்குகாரணம்ஏதும் இருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றார்கள்.

1984-ம் ஆண்டு மார்கழி மாதம் 31-ம் திகதி.

காரணம் காட்டும் திகதி 85-3-29 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி
எஸ். நடராஜா
பதிவாளர்

வரைவு
வ. கு கணபதிப்பிள்ளை
மனுதாரின் சட்டத்தரணி.
1910

For Sale

Well maintained coconut estate for immediate sale. 1 mile from Palai Town — motorable — in blocks of 16—33—23 acres or as Entire unite, with solid built 2 roomed bungalow with toilet and well. Manured regularly -in good bearing. Valid Govt. subsidy for various developement scheme.

Contact :-

S. N. NADARAJAH,
Manager,
Baur and Co., Ltd.
Jaffna. 1934

"Ministry of Intercession"

உங்கள் பிரச்சனை - தேவைகள் - கவலைகளுக்கு ஜெபத்தின் மூலம் ஜெயம் பெறவும் ஆலோசனைகளுக்கும் தொலைபேசி மூலமும் நேரிலும் தொடர்பு கொள்ளுங்கள்.

தொலைபேசி: யாழ்ப்பாணம் 22043

இல: 22 பூங்கா வீதி, குருநகர், யாழ்ப்பாணம். 1967

HOME FINANCE LTD

ஹோம் பினான்ஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம்

பூகொடை ஆலையில் தயாரித்த நவீன ரக சீத்தை-பப்ளின், பிசாமா போன்ற பலரக துணிவகைகள் எங்களிடம் மொத்த விற்பனைக்கு உண்டு. சகாய விலை. விரும்பியோர் உடனே வந்து பார்வையிட்டு தெரிவுசெய்யவும்

NO. 82, KANNATHIDDY ROAD, JAFFNA.

நல்ல சாதி கோழிகள் உடன் விற்பனைக்குண்டு

500 Highlines, 500 Rangers 5 Months Layers உடனடியாக விற்பனைக்குண்டு Owner Leaving Island சனி காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி மட்டும் பார்வையிடலாம்.

தொடர்பு கொள்ளவும்:
திருமதி V. சிவகுருநாதன்,
NO; 34, புங்கங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.
Telephone No: 23855
அல்லது

QUICKS ENTERPRISES,
533, Stanley Road, Jaffna.

ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
24 - 12 - 1924
மறைவு:
23 - 02 - 1984
திதி:
13 - 3 - 1985

அமரர் நா. அருமைநாயகம் அவர்கள்

(ஆத்மஜோதி அச்சக உரிமையாளர்)

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், அறிவின் சுடராய், வாழ்வின் வழிகாட்டியாய் குடும்பத்தின் குலவிளக்காய் ஒளி வீசிய தந்தையே.

நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்தாலும் உங்கள் நினைவு எங்களைவிட்டுப் பிரியாது. உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.
''குருபவனம்'' கண்டி வீதி, சாவகச்சேரி. 1963

மணிவாக்கு

மூடனுடைய பேச்சு விவாதத்துள் நுழையும்; அவனுடைய நாக்கு அடிபட அறைகூவியழைக்கும். அவனுடைய வாயே அவனுக்கு நாசம்; அவனுடைய உதடுகளே அவனுடைய உயிருக்கு மரணவலை.

—பைபிள்

நமது நோக்கு

சண்டை சலசலப்பும் சமாதான மண்டலமும்

எந்த ஸ்தாபனத்தில் ஐக்கியம் என்ற பெயர் உண்டோ அங்கு அப்பண்பு இல்லை என்பது அர்த்தம். ஐ நா. (U N) ஐ அ கு. (U A R) ஐக்கியதேசம் (U K) ஐக்கிய அமெரிக்கா (U S A) என்பவைபோல் ஐ. தே.க. (U N P) ஐக்கிய இடதுசாரி முன்னணி (U L F) த. ஐ. வி. மு. (T U L F) போன்ற அரசியல் கட்சிகள் இதற்கு நல்ல உதாரணமெனக் கொள்ளலாம்.

நான்காவது முறை ஆட்சிக்கு வந்த ஐ. தே. கட்சி தனது ஐக்கியமும் தேசியமும் நீண்ட ஆட்சியின் எட்டாவது வருடத்தில் அதிகம் செலவாகியதால் எட்டாங் கட்டையை நாடி நிற்கின்றது.

நாட்டில் என்றுமில்லாத நெருக்கடியைக் காரணமாகக் கொண்டு பொதுத்தேர்தல் வேண்டுமென்ற குரல் சிறிமாவால் எழுப்பப்படுறது.

இன்றைய அபாய நிலையிலும் பார்க்க இந்தக் கிளர்ச்சி ஆட்சிக்கு ஏக்கம் அளிப்பது கண்கூடு.

புதிய பாராளுமன்ற திறப்புவிழாவில் கட்சி ஒற்றுமையைக் காற்றில்விட்டு முறைதவறி பேரம்பேசின அன்றைய சிரேஷ்டஅமைச்சர் சிறில்மதியூவை இம்முறை திறப்பு விழாவில் காணவில்லை. இவ்வித மாற்றங்கள், பௌத்தமதம் போதிக்கும் உலகநிலையாமையின் உதாரணமென்று நாம்தட்டிக்கழிக்கலாம்.

ஆனால் ஆட்சிக்கு சவால் விடும் தாய்க்கும் சேய்க்கும் அவர்களை ஆதரிக்கும் மக்களுக்கும் விடையிறுப்பதெங்ஙனம்?

நெருக்கடிக்கு இந்தியாவே உதவவேண்டும் என்ற சக்தி பெற்ற மந்திரத்தை அவர்கள் ஜெபிக்கிறார்கள்.

இன்றைய வீழ்ச்சிக்கும், வீடமைக்கும் பரந்த அபிவிருத்தித் திட்டத்துக்கும் இந்தியாவே நாசகாரியாக உள்ளது என்பது பிரதமர் 'பிரேமா'வின் அசையாத கொள்கை

பந்தோபஸ்து அமைச்சர் ஒரு போர் அமைச்சராகவும், சமாதானத் தூதுவராகவும் கடமையாற்ற வேண்டியிருக்கிறது; எனவே இந்தியாவை இவ்வாறு குறிசுட இயலாது.

பிரதமர் 'பிரேமாவும்,' பாதுகாப்பு அமைச்சர் லலித்தும் உறவானால் சிறிமாவோ எழுப்பும் பொதுத்தேர்தல் 'பூச்சாண்டியை' இலகுவாக சமாளிக்கலாமென்பதை ஜனாதிபதி நன்கறிந்தவர்.

இன்று அந்தஉறவு உருவாகிவிட்டது; ஒருவரை ஒருவர் தத்தம் துறையின் (வீடமைப்பு, மகாபொல) சிற்பியென்று பாராட்டிக் கொண்டனர்.

இன்று உருவாகும் போருக்கு வேண்டிய ஆயத்தம் செய்வது இலகுவாகி விட்டது. ஒரு நாட்டின் அரசர் (தலைவர்) இன்னொரு நாட்டுக்குமேல் போர் தொடுப்பதே பகவத்கீதை போன்ற அறநூல்கள் கற்பிக்கும்பாடம்.

அதுமட்டுமல்ல; போர் என்றால், காதல், விவாகம், விவாகரத்துப்போன்று இருபகுதிகள் கட்டாயம் தேவை.

இங்கு போருக்குரிய ஆயத்தம் துரிதமாக நடைபெறுகிறது; எதிரியார்? நேருக்குநேர் மோதிநாட்டின் எல்லைகளைப்பிடிக்க தயாராகும் கூட்டத்தினர்; அவர்களுக்கு அவ்வித துணிவு எங்ஙனம் ஏற்பட்டது?

பயங்கரவாத போராட்டம் ஒரு வெறும் சலசலப்பு; ஆனால் நேரடிப்போர் வேறுபட்டது இதற்கு இந்தியாவே 'வில்லன்'.

இனிப்பான கருத்து: ஜனாதிபதி உருவாக்கிய பிரத்தியேகமான உயர்மட்டமன்றம் ''The Supreme Council'' இனிமேல் ஒற்றுமைப்பட்டு செயற்படும். 1985-ம் ஆண்டு தொடரும் வாய்ப்பு இந்த ஆட்சிக்கு கிடைப்பது இந்தப்போரின் பெயராலே என்பதை மக்கள் அறிய வேண்டும்.

சிறிமாவோ அவர்களுக்கும் அவர்களுடைய ஆதரவாளர்களுக்கும் - ஏன் பல பொதுமக்களுக்கும் ஒரேஒரு அச்சம்: சிங்கள மக்களுக்கு இந்தநாட்டைவிட வேறு நாடு உண்டோ? இந்தியாவை போரில் வெல்லலாமோ?

தக்கவகையில் பிரதமர் ரஜீவுடன் இந்த வில்லங்கத்தை விளக்கினால் நாட்டில் அமைதியும் சிங்களமக்களுக்குரித்தான பாதுகாப்பும் கிடைக்குமென்ற கருத்துக்கும் நியாயமான வரவேற்பு உண்டு.

இந்துமா கடலை அமைதிப் பிரதேசமாக்கவேண்டுமென்ற தீர்மானம் இன்று புதுடில்லியில் முடிவடையும் மாநாட்டில் உறுதி பெற்றுள்ளது.

வல்லரசுக் கப்பல்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டால் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் மன்னார் குடா யுத்தம் ஏற்படப் போவதில்லை.

''இந்து சமுத்திரம் - சமாதான மண்டலம் என்ற பிரகடனத்தின் சிற்பிகள் சிறிமாவோவும் இந்திராவும் என்பது நினைவில் இருக்கட்டும்.

கல்வியைக் காப்பது காளையர் கடன்

''அழுக்குப் படிந்த ஆடையுடன் தோளில் மண்வெட்டியுடன் ஒருவர் வயலிலிருந்து வீதியில் போகிறார் என்றால் அவர் படிக்காத பாமரன் என்று நினைத்துவிடாதீர்கள். அவர் ஒரு என்ஜினியராகவோ, கல்லூரி அதிபராகவோ இருக்கலாம். அல்லது உயர் பதவிவகித்து ஓய்வு பெற்ற கல்விமானாகவும் இருக்கலாம். எனவே யாழ்ப்பாணத்துக்குக் கடமையாற்ற வந்திருக்கும் நீங்கள் இங்கு ஒருவரின் உடையைக்கொண்டு தப்பாக மதிப்பீடு செய்து கொள்ளாதீர்கள். இங்குள்ளவர்கள் பொதுவாக எல்லோருமே படித்தவர்களாகத்தான் இருப்பார்கள் என்பதனை மறந்து விடாதீர்கள்.''

கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய சிங்களப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றலாகிவந்த பொலிஸ் உத்தியோகத்தர் மத்தியில் மேற்கண்ட அறிவுரையை வழங்கினாராம்.

யாழ்ப்பாணத்தில் தடுக்கி விழுந்தால் ஒரு டாக்டர் மீதோ அல்லது என்ஜினியர், கணக்காளர், கல்லூரி அதிபர் கல்லூரி ஆசிரியர் குறைந்தது ஒரு குமாஸ்தா மீதுதான் விழவேண்டும்.

இப்படி வெளிநாட்டார் பலர் சொன்னதுண்டு. பேராசிரியர் கல்கியும் இப்படி ஒருசந்தர்ப்பத்தில் எழுதியதாக ஞாபகம்.

யாழ்ப்பாணத்து மண்ணுக்குச் சில தனித்துவங்கள் உண்டு. இவற்றில் பலவற்றை பழமைஎன்று ஒதுக்கினாலும், என்றும் இளமையாகத்தான் திகழும் கல்வியை ஒதுக்கித் தள்ளிவிடமுடியாது.

சிங்களம் மட்டும் சட்டம் இங்கு கொண்டுவரப்பட்டதற்கு மூல காரணம் இலங்கையில் உயர் அரசாங்க பதவிகளிலும், அரசாங்கசேவைகளிலும் தமிழர்களே ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பதே!

1956-ம் ஆண்டு யூன் மாதம் 5 திகதி பாராளுமன்றத்தில் எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டார நாயகாவினால் கொண்டு வரப்பட்ட ''சிங்களம் மட்டும் மசோதா'' மீது நடைபெற்ற விவாதத்தில்பேசிய அன்றைய ஆளும்கட்சி உறுப்பினர் பலரும் ''அரசாங்க சேவையில் தமிழரின் ஆதிக்கம்'' பற்றியே குறிப்பிட்டிருந்தனர். இந்த விவாதத்தில் கலந்துகொண்டு 1956-ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் திகதி திரு. எஸ்.ஜே வி. செல்வநாயகம் பேசுகையில்,

''இந்த விவாதத்தில் தபால் தந்தி, தகவல் உதவி அமைச்சர் [கே. எம். பி. ராஜரத்னா] பேசுகையில்; அரசாங்க சேவையில் அறுபத்திஎட்டு வீதமானவர்கள் தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டிருந்தார்'' என்று எடுத்துக் காட்டி இந்தப் புள்ளிவிபரங்கள் தவறானவையென்றும் அரசாங்க சேவையில் தமிழர்கள் முப்பது,முப்பத்தைந்து வீதமே உள்ளனரென்றும் சொல்லியிருந்தார்.

எஸ். எம். ஜி.

அரசாங்க சேவையில் தமிழர் எந்த விகிதாசாரத்தில் அங்கம் வகித்திருந்தாலும் அவர்கள் அன்று விகிதாசார அடிப்படையில் தெரிவுசெய்யப்படாமல் தகுதியின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்பட்டிருந்தார்கள்.

ஆனாலும் சிங்களம் மட்டும் சட்டம் தகுதி அடிப்படையை நீக்கி, இன ரீதியான அடிப்படையையும் விலக்கி, தமிழ் மக்களை அரசாங்க சேவையிலிருந்து படிப்படியாக ஒதுக்கித்தள்ளிவிட்டது.

தமிழரின் கல்வி முன்னேற்றமே அவர்களின் அபரிமிதமான வளர்ச்சிக்கு காரணம் என்பது ஆட்சியாளரின் கருத்து.

இந்த நிலையை மாற்றுவதற்கும் 'அவர்கள்' வழிவகுத்தனர். யாழ்ப்பாணத்தில் மட்டும் கல்லூரிகள் ஏன் சகல வசதிகளையும் கொண்டதாக அமைந்திருக்கின்றன, ஏன் இந்த வசதி இதர பகுதிகளிலும் இல்லை?

இந்தக் கேள்வியுடன் நாட்டிலுள்ள பல பகுதிகளிலும் சில கல்வி நிறுவனங்கள் உயர்ந்த தரத்தில் செயல்படுவதால் அங்கும் தமிழர்களே வசதியும் வாய்ப்பும் பெறுகிறார்கள் என்ற கருத்தும் தோன்றியது.

எனவே கல்விக்கூடங்களில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை நீக்கி சகல மட்டத்திலும் கல்வியில் ''சரிநிகர் சமானம்'' ஏற்படுத்துவதற்காக பாடசாலைகளை அரசாங்க உடைமையாக்கும் திட்டம் 1960ஆம் ஆண்டு டிசம்பரில் கொண்டு வரப்பட்டது.

சிங்களம் மட்டும் சட்டம், கல்விநிறுவனங்களைக் கையேற்றல் போன்ற என்ன நடவடிக்கைகளை எடுத்தாலும் தமிழர்கள் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்கள் கல்வியில் முன்னேற்றம் பெறுவதைத் தடுக்க முடியவில்லை.

இதன் பின்னர் 'தரப்படுத்தல்' என்ற புதியமுறை கொண்டுவரப்பட்டது.

இதன் எதிரொலிதான் இன்றைய கிளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் போராட்டத்துக்கும் வழிவகுத்துள்ளது என்பதை இன்று சிலர்மறந்துவிட்டார்கள்.

ஆனாலும்கல்வியில் தமிழர் குறிப்பாக யாழ்ப்பாணத்தவர் முன்னேறாமல் தடுப்பதற்குச் சட்டரீதியாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அதிகபயனளிக்காமல்போகவே கல்வி அறிவுக்கு மூலாதாரமான பொது நூல்நிலையங்களையும் கல்லூரி நூல்நிலையங்களையும் எரித்து அழித்துஒழிப்பதற்கு முன்வந்தனர்.

இந்தநிலையில் நமது ஒரேயொருமூலதனமும் மூளைவளமும்கல்விதான் என்று கற்றுவரும் தமிழ்ச்சிறார்களுக்கு வருங்காலத்தமிழ் வழிகாட்டல்களுக்கு தீவிரவாதிகள் என்றபெயரில் சிலர் எந்த நோக்கத்துடனோ, எவர்பின்னணியிலோ இடையூறுவிளைவித்துவருவது தமிழ்ச்சமுதாயத்தை 'அவர்கள்' அழிப்பதைவிடமிக ஆபத்தானது.

பாடசாலை பகிஷ்கரிப்பும், பரீட்சைகளைக்குழப்புவதாலும் தொடர்ந்து நீடித்தால் இன்று ஆபிரிக்கநாடுகள் பலவும் வெளிநாட்டிலுள்ள கல்விமான்களை இறக்குமதி செய்வது போன்றநிலை நாம்காண விரும்பும் சுதந்திரநாட்டிலும் ஏற்படலாமென்ற அச்சமே தோன்றுகிறது.

இந்த அழிவு நிலையிலிருந்து தமிழ் மக்களைக்காப்பாற்ற வேண்டியது இன்றைய தமிழ்க் காளையர்களின் கடனாகும்.

மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் மார்ச் 27ம் திகதி பகல் நடைபெறவுள்ளது. நயினாதீவு பரமேஸ்வரக் குருக்கள் தலைமையில் பதினொரு குருமார் மகாகும்பாபிஷேகக் கிரியைகளை நிகழ்த்துவார்கள்.

மேற்படி ஆலயத்தில் மூன்று இலட்ச ரூபா செலவில் திருப்பணி வேலைகள் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது

(மா)

தவக்காலச் சிந்தனை

4—ம் நாள்

''மருத்துவன் நோய் அற்றவர்க்கன்று நோயுற்றவர்க்கே தேவை. நீதிமான்களை அன்று மனந்திரும்பும்படி பாவிகளையே அழைக்க வந்துள்ளேன்'' (லூக்: 5/82) என்று கிறிஸ்துநாதர் மொழிந்தார். பாவிகளாய், சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களாய் தாழ்ந்தோர் என்று கூறப்பட்டவர்களாய் வாழுகின்ற மக்களுக்கு முழுவாழ்வு வழங்கவே கிறிஸ்து முனைகின்றார். ஏற்றம் மிகு வாழ்வை ஏழைகளாய் எளியவராய், தூற்றப்பட்டு வாழுபவருக்கு அள்ளிக்கொடுப்பதிலே நாம் அயராது உழைக்க வேண்டும் என்பதனையே அன்பு நிறை கிறிஸ்து நினைவூட்டுகின்றார்.

அருட்திரு வின்சென்ற் பற்றிக்
O. M. I.

கலட்டி ஆலயத்தில் இன்று பூசை

[சுண்டுக்குளி]

வண்ணை கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் மாதச் சதுர்த்தியை முன்னிட்டு நாளை மாலை மூலமூர்த்திக்கு அபிஷேகம், பூசை என்பன நடைபெற்று விநாயகர் திருவீதி உலாவும் நிகழும்.

மதுரையில் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

சென்னை, பெப். 22

இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு கண்டனம் தெரிவித்து மதுரைக்கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தினர்.

காங்கேசன்துறையில் ஓவ்வூதியம் பெறுவோர்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறையில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இம்மாதம் 27ம் திகதி குருநகர் முகாம் மக்கள் வங்கியில் வழமைபோல் ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும், அன்று எடுக்கத் தவறியவர்களுக்கு பின்னர் ஓய்வூதியம் வழங்கப்படமாட்டாது என்றும் காங்கேசன்துறை அஞ்சல் அதிபரி அறிவித்துள்ளார்.

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளுக்கு நிதியுதவி அளிக்கப்படும்

பிரதமர் ராஜீவ் எம். ஜி. ஆருக்குக் கடிதம்

புதுடில்லி, பெப். 22

இந்தியா வந்துள்ள இலங்கை அகதிகளுக்கு இந்தியா நிதியுதவி அளிக்கும். இந்திய கடலாதிக்க எல்லைக்குள் இந்திய மீனவர்கள் உயிரிழந்தமை குறித்து தமிழ்நாடு அரசாங்கத்தைப் போல், இந்திய மத்திய அரசும் ஆழ்ந்த கவலையடைந்துள்ளது''.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி இம்மாதம் 15ம் திகதி தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனுல் அவருக்கு அனுப்பப்பட்ட ரெலக்ஸ் செய்திக்கு அனுப்பிய பதிலிலே தெரிவித்துள்ளார்,

திரு ராஜீவ்காந்தி அப்பதிலில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

''இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கொல்லப்பட்டமை குறித்து, இந்திய அரசு இலங்கை அரசாங்கத்துடன் தொடர்புகொண்டுள்ளது.

'இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கொடூரமாகத் தாக்கப்பட்டமை குறித்து, இந்திய மத்திய அரசு ஆழ்ந்த கவலையடைந்துள்ளது.

''இந்திய கடலோரப் பாதுகாப்பைத் தீவிரப்படுத்தி, இந்திய மீனவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு இந்திய மத்திய அரசு இந்தியக் கடலோர ரோந்துப்படையினருக்கு உத்தரவிட்டுள்ளது.

''இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலினுல் உயிரிழந்த இந்திய மீனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும்'' என்றார்.

மேலும் 167 குடும்பங்கள் ராமேஸ்வரம் வந்தன

இலங்கை அகதிகளுக்குப் பொலிஸ் பாதுகாப்பு

சென்னை, பெப். 22

இலங்கையிலிருந்து 167 தமிழ்க் குடும்பங்கள் அகதிகளாக நேற்று ராமேஸ்வரம் வந்து சேர்ந்தனர். இவர்கள் பேசாலை. மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலிருந்து வந்ததாகக் கூறப்பட்டது.

இம்மாத தொடக்கத்திலிருந்து 6,800க்கும் அதிகமான அகதிகள் இந்தியா வந்ததாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அகதிகளில் 3,875பேர் தூத்துக்குடி, சேலம், தென்னாற்காடு. மதுரை, காசிபுரம், நாகபட்டினம் உட்பட பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப் பட்டுள்ளனர்.

ஏனைய அகதிகள் ராமநாதபுரம் மண்டபம் முகாம்களில் தங்கியுள்ளனர் என்று கூறப் பட்டது.

பொலிஸ் பாதுகாப்பு

ராமேஸ்வரத்திலுள்ள அகதிகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்க ஏற்பாடு செய்துள்ளதாகவும் இந்த அகதிகளின் சொத்துக்களைப் பாதுகாக்க பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதாகவும் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். குரு மூர்த்தி தெரிவித்தார்.

இந்தியாவில் வரிவிதிப்புக்கு உட்பட்ட பொருட்களை விற்க வேண்டாமென்று சுங்கஇலாகாவினர் ஆலோசனை கூறியுள்ளனர்.

இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்கு இராமேஸ்வரத்தில் நல்ல வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன அவர்களுக்கு போதிய வசதிகள் அங்கு செய்துகொடுப்பதில்லை என்று வெளிவரும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை. மனவருத்தத் துக்குரியவை என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இராமேஸ்வரம் பகுதிக்கு அகதிகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றார்கள், இதனால் ஐந்துலட்சம் ரூபா செலவில் மண்டபம் பகுதியில் அகதிகள் தங்குவதற்காக பந்தல்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இராமேஸ்வரத்துக்குநேற்று முனதினமும் 25 படகுகளில் சுமார் 1000 தமிழர்கள் அகதிகளாக வந்தார்கள், (சூ)

தமிழ்நாடு வரும் அகதிகள் உடைமைகளை பறிக்க முயற்சி!

(சென்னை)

இலங்கையிலிருந்து அகதிகளாக வரும் இலங்கைத் தமிழர்கள்கொண்டுவரும்பொருட்களை இராமேஸ்வரம் இறங்கு துறையில் சில தேசவிரோத சக்திகள் பறித்துச் செல்கின்றனராம்.

சுங்க இலாகா அதிகாரிகள் போன்று வேடம்தரித்த இவர்கள் இந்த அகதிகளிடமிருந்து அவர்கள் கொண்டுவரும் பொருட்களை பறித்துச் செல்கின்றனர். இதனைத் தடுப்பதற்கு சுங்கஇலாகா கடும் நடவடிக்கை எடுக்கும் என்று அந்த இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை அகதிகள் ரெலிவிஷன், டெக் போன்ற பொருட்களையும் கொண்டு இராமேஸ்வரம் வருகின்றனர்.

இதனல் இந்த அகதிகள் இந்தியாவில் வரிவிதிப்புக்கு உட்பட்ட பொருட்களை விற்க வேண்டாமென்று சுங்கஇலாகாவினர் ஆலோசனை கூறியுள்ளனர்.

இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்கு இராமேஸ்வரத்தில் நல்ல வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன அவர்களுக்கு போதிய வசதிகள் அங்கு செய்துகொடுப்பதில்லை என்று வெளிவரும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை. மனவருத்தத் துக்குரியவை என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இராமேஸ்வரம் பகுதிக்கு அகதிகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றார்கள், இதனால் ஐந்துலட்சம் ரூபா செலவில் மண்டபம் பகுதியில் அகதிகள் தங்குவதற்காக பந்தல்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இராமேஸ்வரத்துக்குநேற்று முனதினமும் 25 படகுகளில் சுமார் 1000 தமிழர்கள் அகதிகளாக வந்தார்கள், (சூ)

பாகிஸ்தான் பொதுத்தேர்தல்:

சீர்குலைக்காமல் தடுக்க 1,500 பேர் கைது!

இஸ்லாமாபாத், பெப். 22

பாகிஸ்தானில் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள பொதுத்தேர்தலை சீர்குலைக்காமல் தடுப்பதற்காக, முன் நடவடிக்கையாக 1,500 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பல முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொதுத்தேர்தல் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடும் பொருட்டே பாகிஸ்தான் அரசு பெரும்தொகையானவர்களைக் கைதுசெய்து வருவதாக கராச்சியில் கைது செய்யப்பட்ட எதிர்க்கட்சித் தலைவ ரொருவர் தெரிவித்தார்.

ராஜஸ்தான் சட்டசபைத் தேர்தல்:

சுயேச்சை வேட்பாளர் மரணம் குறித்து விசாரணை

புதுடில்லி, பெப். 22

ராஜஸ்தான் சட்ட சபைத் தேர்தலில் போட்டியிடவிருந்த சுயேச்சை வேட்பாளர் மான்சிங்கின் மரணம் குறித்து நீதி விசாரணை நடத்தப்படுமென்று ராஜஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

ராஜஸ்தான் முதலமைச்சரின் ஹெலிகாப்டரை தனது ஜீப்பிலை மோதமுற்பட்ட போது பொலிசாருகும் மான்சிங்குக்குமிடையே இடம் பெற்ற மோதலில் மான்சிங் மரணமானர்.

இந்த விபத்தில் ராஜஸ்தான் முதலமைச்சர் செய்வாதீன மாக உயிர்தப்பியது தெரிந்ததே.

பேசாலைக் கிராமம் வெறிச்சோடியுள்ளது

ராமேஸ்வரத்தில் இலங்கை அகதிகள் தகவல்

சென்னை, பெப். 22

மன்னாரிலுள்ள பேசாலை மீனவக் கிராமம் வெறிச்சோடியுள்ளதாக ராமேஸ்வரம் வந்துள்ள அகதிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை ராணுவத்தின் தாக்குதலுக்கு அஞ்சியே இக்கிராமத்திலுள்ள மக்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டதாக இந்த அகதிகள் தெரிவித்தனர்

ராணுவத்தினரின் கொடுமைகளுக்கு அஞ்சி, காடுகளில் வாழ்வதற்கும் பாதுகாப்பு இல்லாததால் தாங்கள் ராமேஸ்வரம் வந்துள்ளதாகவும் கூறியுள்ளனர்.

''மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தில் பலப்பரீட்சை இல்லை!''

(மானிப்பாய்)

''தலைவருக்கும், பொதுமுகாமையாளருக்கு மிடையில் எதுவித பலப்பரீட்சையும் நடைபெறவில்லை. பொதுமுகாமையாளரின் நிர்வாகத்தில், உணவு விநியோகம் எதுவித தடங்கலுமின்றி நடந்து வருகிறது''.

இவ்வாறு மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 20 ஆம்திகதி ஈழநாடு பத்திரிகையில் மானிப்பாய்கோவில் பற்று ப. நோ. கூ. சங்கத்தில் ஏற்பட்டுள்ள தடங்கல்'' என்ற தலையங்கத்தின் கீழ் வெளிவந்த விபரங்களை பணியாளர் உபசபையினர்விரிவாக ஆராய்ந்தனர். இதில்சங்கத் தலைவருக்கும், பொதுமுகாமையாளருக்கும் எதுவிதமான பலப்பரீட்சையும் நடைபெறவில்லை சங்க இயக்குனர்சபையின் கொள்கைகள் வகுக்கப்பட்ட விதத்தில் பொதுமுகாமையாளரின் நிர்வாகத்தில் உணவுவிநியோகம் எதுவிததடங்கலுமின்றி பாவனையாளர்களுக்கு ஒழுங்காக விநியோகிக்கப்பட்டு வருகிறது. விடுமுறை நாட்களில் கூட பொதுமுகாமையாளரின் நிர்வாகத்தின் கீழ் பேக்கறிகளுக்கும் மாவிநியோகிக்கப்பட்டுள்ளது பிரசுரிக்கப்பட்ட இச்செய்தியை மறுப்பதோடு, இது சங்கத்திற்கு களங்கத்தை உண்டுபண்ணும் செய்தி ஆகையால் இதற்கு பாவனையாளர் பாதுகாப்பு சங்கத்திற்கு மறுப்புதெரிவிக்கிறது. இத்தகவல்லையே சங்கத் தலைவரும் ஏனைய ஆறு இயக்குனர்சபை உறுப்பினர்களும் தெரிவித்துள்ளார்கள்.

பூஞ்சணக் காளான் நோய்களைப் பூரணமாகக் கட்டுப்படுத்த...

'டைத்தேன் எம் 45'



பல பாவனைக் காளான் நாசினி 'டைத்தேன் எம் 45'

உருளைக் கிழங்கு, மிளகாய், வெங்காயம், புகையிலை, நிலக் கடலை, தக்காளி, கரட், அவரை, கரை, கோவா, பூக்கோவா, திராட்சை முதலிய எந்தப் பயிரைப் பாதிக்கும் எவ்வித பூஞ்சணக் காளான் நோய்களையும் அது அறவே கட்டுப்படுத்தும்.

வெளிறல், வெதும்பல், அழுகல், வாடல், புள்ளி விழல், கொப்புள நோய் போன்ற எல்லா வற்றையும் ஒழிக்கும் 'டைத்தேன் எம் 45' பாவித்து, அதிக விளைச்சலும் இலாபமும் பெறுங்கள்.

பயிர் வளம் பெருக்கப் பாவியுங்கள் 'டைத்தேன் எம் 45'

250 றாம்: ரூ. 40/-
500 றாம்: ரூ. 75/-

உற்பத்தியாளர்:
CIC
கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட் த.பெ. எண் 352, கொழும்பு 1.

உதவி கட்டுப்பாட்டு அதிகாரி கூறுகிறார்

வடக்கில் உணவுப்பொருள் தட்டுப்பாடு இப்போது இல்லை!

(புலோலி)

அண்மையில் ஏற்பட்ட உணவுப்பொருட்கள் தட்டுப்பாடு தொடர்பாக பருத்தித்துறைப் பிரஜைகள் குழு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கு செய்த முறைப்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலுவினால் ஒரு அவசர மகாநாடு அவரது அலுவலகத்தில் கூட்டப்பட்டது. இந்த மகாநாட்டில் கலந்து கொள்ள யாழ் அரசாங்க அதிபர் திரு கே. எம். பஞ்சலிங்கம், யாழ். உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு பற்குணத்தையும் யாழ். பிராந்திய கூ. மொ. வி. முகாமையாளர் திரு சந்தசாமியையும் அனுப்பிவைத்தார்.

பருத்தித்துறை, புலோலி, ப. நோ. கூ. ச முகாமையாளர்களும், பருத்தித்துறைப் பிரஜைகள் குழுத்தலைவர் பேராசிரியர் வி. கே கணேசலிங்கம் தலைமையிலான பிரஜைகள் குழுப்பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி நிலவிய சீனி, மா, பருப்பு, தட்டுப்பாடு நீங்கிவிட்டதாகவும், வேண்டிய அளவில் ப. நோ. கூ. ச. வுக்கு வழங்க முடியும் என்று கூறி, வருங் காலத்தில் பருத்தித்துறைப் பகுதிக்கு ஏற்படும் தனியான இடர்களை நீக்கத்தன்னாலான எல்லா உதவிகளையும் செய்வதாகவும் கூறினார். வடபிராந்திய கூ. மொ வி. முகாமையாளர் தங்களிடமும் வேண்டிய அளவு பருப்பு, சீனி, மா, உண்டென்றும் கேட்பவர்களுக்கு, தனியார்துறையினர் உட்பட' எல்லாருக்கும் வழங்குவதற்கு முடியும் என்றும் கூறினர். எரிபொருள் தட்டுப்பாடு ஓரளவு நீங்கிவிட்டதாகவும், அதுபாதுகாப்பு அதிகாரத்துக்கு உட்பட்டதென்றும் தெரிவிக்கப்பட்டது மண்ணெண்ணை வேண்டியஅளவு திரிகோணமலையிலிருந்து கொண்டுவர ப நோ. கூ சங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. உடனடியாக ஆவன செய்ய ப. நோ. கூ. சங்க முகாமையாளர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

இன்றைய பலன்

மாதம் - மாசி
திகதி - 12 (1985-2-23)
வாரம்- சனி
நட்சத்திரம்- சதுர்த்தி முழுநாளும்

மேடம்: நீண்டநாள் நண்பர் ஒருவரை சந்திக்கநேரும் எதிர்பாராத வரவுமுண்டு.

இடபம்: தூரத்து செய்தி ஒன்று துயரத்தைத் தரலாம் மனத்திடம் வேண்டும்.

மிதுனம்: இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும்.

கடகம்: எண்ணியகாரியம் தடைப்படலாம், திடீர்முடிவு தவிர்த்தல் நன்று

சிங்கம்: உதவி செய்யப் போய் உபத்திரவத்தைத் தேடிக் கொள்வீர்கள்.

கன்னி: காதல் விவகாரங்களில் கவலை தோன்றும், குடும்பத்தில் அமைதிகுன்றும்.

துலாம்: தடுமாற்றத்திற்கு இடமுண்டு. துணிவே துணையெனநடக்கவும்.

விருச்சிகம்: பெரியோர்களின் ஆசியும் தெய்வத்தின் உதவியும் தாரளம்உண்டு.

தனுசு: தொழில் புரியுமிடத்தில் சிறிய தலையிடிக்கு இடமுண்டு, நிதானம் விரும்பத்தக்கது.

மகரம்: நம்பிக்கை மோசடிகள் நடைபெறலாம், அவதானம் வேண்டும்.

கும்பம்: வெளியிடத்து தொடர்புகள் பெருகும், வேண்டிய ஒருவரின் உதவி கிடைக்கும்.

மீனம்; குடும்பப் பிரிவுக்கும் குறிக்கோள் தோல்விக்கும் இடமுண்டு, பொறுமை வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

றீகல் மினி
தினசரி 10-15, 1-30
தியாகராஜன், அம்பிகா, ராஜீவ், ஊர்வசி நடிக்கும்
சத்யா மூவிஸ்
நெருப்புக்குள் ஈரம்

றீகல்
தினசரி 10-30, 2 00
AN OFFICER AND A GENTLEMAN
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
36 Chamber of Sholine (KaratteFilm)
வெலிங்டன்
(யாழ். நகர்)
10-15, 12-15, 2 30
சிவாஜி, கே. ஆர். விஜயா பிரபு நடித்த
நீதிபதி
(கலர்)

வலி. மேற்கு மீனவர்களுக்கு ரூ 20லட்சம் உணவு முத்திரை!

(சித்தன்கேணி)

வலி-மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பத்து கிராமசேவை அலுவலர் பிரிவிலுமுள்ள பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர் சுமார் 500 குடும்பத்தினரைச் சேர்ந்த 6, 006 பேருக்கு சுமார் 20 இலட்சம் ரூபா பெறுமதியான உணவு முத்திரைகள் வழங்கப்பட்டது.

இவ் உணவு முத்திரைகள் உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கத்தின் பிபார்சின்படி விசேட சேவை அதிகாரிகள், கிராமசேவை அலுவலர்கள் ஆகியோரினால் வழங்கப்பட்டது.

'ரெலா' அறிக்கை

பரீட்சையைக் குழப்பாதீர்!

(யாழ்ப்பாணம்)

'மாணவச் செல்வங்கள் இராப்பகலாக இரண்டு வருடங்கள் சிரமப்பட்டுக் கல்வி கற்று பரீட்சை எழுதும்போது அதனைக் குழப்பினால் அவர்களின் நம்பிக்கையும் எதிர்கால எதிர்ப்பார்ப்பும் நாசமாகின்றது ஆதலால் அடுத்த வாரம் நடைபெறப் போகின்ற பரீட்சைக்கு தடை செய்து இடையூறு செய்யாதீர் குழப்புவோர் சமூக விரோதிகளாகவே மக்களால் கணிக்கப்படுவர். எமது விடுதலைப் போராட்டத்திற்கு உருவாகும் சிந்தனையாளர்களை இழக்க வேண்டிய ஒரு நிலையை உண்டு பண்ணுதல் தடுப்பதுநமதுகடமையாகும்.'

இவ்வாறு 'ரெலா' என்ற தமிழீழ விடுதலை இராணுவம் விடுதலைப்புலிகள் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டக்கண்டலில்...

[1-ம்பக்க 2ம்கலத் தொடர்ச்சி]

கலவான தொகுதி எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகம தெரிவித்தார்.

நேற்றுப் பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணைமீது பேசும் போதே மேற்கண்டவாறுஅவர் தெரிவித்தார்.

திரு சரத்முத்தெட்டுவேகம தொடர்ந்து கூறியதாவது:- ''இந்தியாவுக்கு அகதிகளாக இலங்கையர்கள் செல்கின்றனர் என்று ஜனதிபதியே தெரிவித்துள்ளார். பங்களாதேஷ் தனி நாடு இது போன்றே அகதிகள் பெருக்கத்தால் உருவாகியிருந்தது இலங்கையில் இஸ்ரேலியர்கள் அழைக்கப்பட்டபின்னரே நிலைமை மோசமடைந்திருக்கின்றது.'' என்றார். [கி]

கடத்தப்பட்ட...

[1ம்பக்க ம் கலத்தொடர்ச்சி]

விடுத்துள்ள வேண்டுகோளில் மேற்கண்டவாறு குறிப்பிடப்டுள்ளது.

''எங்களுடைய இறுதியான வேண்டுகோள்''எனக் குறிப்பிடப்பட்டுள்ள அந்த வேண்டுகோளில்; ''கடத்திச் செல்லப்பட்டுள்ள எமது கணவன்மார் இருவரும் எவ்வித பாதகமும் அற்ற நிலையில் உயிருடன் சந்தோஷமாக இருப்பார்கள் என்று நம்புகின்றோம் எமது கணவன்மாரின் பிரிவால் நாங்களும் எமது பிள்ளைகளும் சொல்லொணா வேதனையை அனுபவித்து வருகிறோம். அவர்களை விடுதலை செய்ய ஏற்பாடு செய்க என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ரா)

அமெரிக்க ..

[1-ம்பக்க5ம்கலத் தொடர்ச்சி]

1986-ம் நிதி ஆண்டுக்கான உத்தேச வெளிநாட்டு உதவித் திட்டம் சம்பந்தமான பாராளுமன்ற ஆசிய பசுபிக் உபகுழு முன் இலங்கைப் பிரச்னைப் பற்றி பேசுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

''இலங்கையின் வடபகுதியில் பாதுகாப்புப் படையினர் தமிழ் தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்கு பலமுறை பின்வாங்கியுள்ளனர். அங்கு பாதுகாப்புப்படையினர் பெருமளவிலும் இறந்துள்ளார்கள். தமிழ் ஈழ தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்கு பாதுகாப்புப் படையினர் சிங்களவர், தமிழர் ஆகிய எல்லா தரப்பினரும் பலியாகியுள்ளனர்.

இலங்கையின் இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு இந்தியா ஆற்றி வரும் பணியையும் பங்களிப்பையும் அமெரிக்க அறிந்துள்ளது. இலங்கைத் தமிழ் தீவிரவாதிகளுக்கு இந்தியாவில் பாதுகாப்பு வசதிகள் அளிக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டினையும் அமெரிக்காவுக்குத் தெரியும், உண்மையில் இப்பிரச்னைக்கு இந்தியாவும் இலங்கையும் கலந்து பேசிக்கொள்வதன் மூலமே தீர்த்துவைக்க முடியும் இதுவிடயத்தில் இரு நாடுகளும் ஒத்துப் போக வேண்டும் என்றே அமெரிக்கா விரும்புகிறது.

"உலக வெற்றிக்கிண்ண கிரிக்கெட்" போட்டி:

இலங்கை-நியூஸிலாந்து இன்று மோதுகின்றன

அவுஸ்திரேலியாவில் நடைபெறும், மட்டுப்படுத்தப்பட்ட 'உலக வெற்றிக் கிண்ண' கிரிக்கெட் போட்டியில், இலங்கை கிரிக்கெட் கோஷ்டி இன்று நியூஸிலாந்துக் கிரிக்கெட் கோஷ்டியை எதிர்த்து, 'மல்போன் மைதானத்தில் மோதுகின்றது.

கிரிக்கெட போட்டியில் உலகப் பிரசித்தி பெற்ற ஏழு நாடுக் கோஷ்டிகள் இப் போட்டியில் பங்கு பற்றுகின்றன. இப்போட்டி 'ஏ' 'பி' என இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆட்டங்கள் நடாத்தப்படுகின்றன

'ஏ' பிரிவில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளும், 'பி' பிரிவில் இலங்கை, மே. இந்தியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளின் கிரிக்கெட் கோஷ்டிகள் பங்கு பற்றுகின்றன.

அவுஸ்திரேலியா வெற்றி

சென்றகிழமை ஆரம்பமான இப்போட்டியின் 'ஏ' பிரிவு முதல் ஆட்டத்தில் அவுஸ்திரேலியாக் கோஷ்டி இங்கிலாந்துக் கோஷ்டியை வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்துக் கோஷ்டி '48 ஓவர்களில்' சகல விகெட்டுகளையும் இழந்து மொத்தம் 214 ஓட்டங்களைப் பெற்றது. அவுஸ்திரேலியாக் கோஷ்டி '45 ஓவர்களில்' 215 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இந்தியாக் கோஷ்டி வெற்றி

மற்றுமொரு 'ஏ' பிரிவுப் போட்டியில், தற்போதைய 'உலகச் சாம்பியனான' இந்தியாக் கோஷ்டி பாகிஸ்தான் கோஷ்டியை வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் கோஷ்டி மொத்தம் 183 ஓட்டங்களைப் பெற்றது. இந்தியாக் கோஷ்டி 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 184 ஓட்டங்களைப் பெற்றது. 21 வயது நிரம்பிய இளம் துடுப்பாட்டக்காரரான எம் அர்ஷ்தீன் ஆட்டமிழக்காமல் 93 ஓட்டங்களைப் பெற்றது சிறப்பம்சமாகும் இந்தியாக் கோஷ்டியின் காப்டன் சுனில் கவஸ்கர் 54 ஓட்டங்களைப் பெற்றார்

தலா ஒரு புள்ளி

'பி' பிரிவில் நியூஸிலாந்துக்கும் மே. இந்தியக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டி மழைகாரணமாக இடைநிறுத்தப்பட்டது இப் போட்டியில் இவ்விரு கோஷ்டிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

'பி' பிரிவில் இரண்டாவது ஆட்டம் இன்று இலங்கைக் கோஷ்டிக்கும், நியூஸிலாந்துக் கோஷ்டிக்குமிடையில் நடைபெறுகின்றது

இதற்கு முன்பு கடந்த இரு மாதங்களாக அவுஸ்திரேலியாவில் மே இந்தியா, இலங்கை, அவுஸ்திரேலியா ஆகிய மூன்று நாடுகளுக்குமிடையில் நடைபெற்ற தனிப்பட்ட 'மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்' உலக வெற்றிக் கிண்ணப் போட்டியில் இலங்கை தோல்வியடைந்தது இப்போட்டியில் இலங்கை பத்து ஆட்டங்களில் பங்குபற்றி, ஒரேஒரு ஆட்டத்தில் மட்டுமே வெற்றி பெற்று இரண்டு பள்ளிகளை மட்டுமே பெற்றது. இப்போட்டியில் மே இந்தியா முதலாவது இடத்தையும், அவுஸ்திரேலியா இரண்டாவது இடத்தையும் பெற்றது

6 போட்டிகளில் இலங்கை வெற்றி

இவைதவிர, இலங்கைக் கோஷ்டி அவுஸ்திரேலியாவில் உள்ள ஆறு மாகாணங்களின் தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டிகளுடன் விளையாடிய சிநேக பூர்வமான 'மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்' கிரிக்கெட் போட்டிகள் அனைத்திலும் அபாரமாக வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (வி)

(விளையாட்டு நிருபர் "தேவா")

இடமாற்றம்

(சுண்டுக்குளி)

யாழ். உணவுக்கட்டுப்பாட்டுக்கிளையில் லிகிதராக கடமை பாற்றிய திரு ஆர். பரராசசிங்கம் பெப்ரவரி மாதம் 13ம் திகதி முதல் வவுனியா கச்சேரிக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். இவரது சேவையைப்பாராட்டி அக்கிளை ஊழியர்களால் பிரிவுபசாரவைபவமொன்று அளிக்கப்பட்டது.

பாரிஸ்டர் அம்பலவாணர்

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட பாரிஸ்டர் அம்பலவாணர் ஐயா மறைந்து விட்டார் என்ற செய்தி என்னை போன்று அவரது திறமைகளையும், துணிச்சலையும், சாதனையையும் உணர்ந்தவர்களுக்குப் பேரிடியாக அமைந்துவிட்டது. அவர் புகுந்த இடமான திருநெல்வேலியில் பெரும் புகழோடு வாழ்ந்த பெரியார்! 'ஈழநாடு' பத்திரிகை அவர் அரசியல் ஞானத்தை விமர்சித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது

அன்பு, பண்பு, துணிவு, துடிப்பான பேச்சு, இவற்றோடு, கம்பீரமான தோற்றம் கொண்ட தவப்புதல்வன் பாரிஸ்டர் அம்பலவாணர்!

பல்வேறுதுறைகளில் ஈடுபாடுள்ளவர்கள் இவரிடம் வந்து ஆலோசனை பெற்றுச் செல்வார்கள்.

தமிழினம் இவர் துணிவையும், செயல்திறனையும் நினைவு கூரவேண்டும். அது எங்களுக்கு மேலும் துணிவைத்தரும்.

—ஏ. சிவலோகநாதன்

ப.நோ.கூ.சங்க கொள்ளையின் எதிரொலி

ஆர்ப்பாட்டம், ஊர்வலம் மறியல் இடம்பெற்றது!

[மாவிட்டபுரம் நிருபர் எஸ்.ஆர்.ஞானசுந்தரம்]

தெல்லிப்பழை ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தில் இடம் பெற்ற கொள்ளைகளைக் கண்டித்து நேற்று முழுவதும் கதவடைப்பு செய்ததுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தி மறியல் போராட்டமும்நடாத்தினர்கள்.

மேற்படி சங்கத்தில்தொடர்ந்து நடைபெற்றுவரும் கொள்ளைகளைக் கண்டிக்கும் வகையில் சங்க தலைமையகம், கிளைகள், சிற்றுண்டிச்சாலை உட்பட சங்கத்தின் கீழ் இயங்கும் சகல நிலையங்களும் இன்று கதவடைப்பு செய்யப்பட்டன.

நேற்றுக்காலை சங்கத் தலைமையகத்தில் இருந்து சங்க ஊழியர்கள் 150ஆகு மேற்பட்டவர்கள் தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவில்வரையிலும், பின் தெல்லிப்பழை தபால் நிலையம் வரையிலும் சுலோக அட்டைகள் தாங்கி ஊர்வலம் நடத்தினர்கள். இதையடுத்து தலைமையகத்தில் மறியல் போராட்டம் நடத்தினர்கள். இதில் சங்கத்தின் ஊழியர்களும், பொதுமக்களும், இயக்குநர், பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

நேரில் பார்வையிட்ட மற்றும் பல நோ கூட்டுறவுச் சங்கத்தினரும் இதில் சொற்ப நேரம் கலந்துகொண்டனர். சங்கத் தலைவர் திரு. சி. சிவமகாராசா, சுன்னாகம் ப.நோ.கூ. சங்கத் தலைவர் திரு. சி குமாரவேலுவும்கலந்துகொண்டனர்.

போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தெல்லிப்பழையிலுள்ள சகல வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டிருந்தன.

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் கா லை முதல் மறியல் போராட்டமும் கதவடைப்பும் இடம்பெற்றது சங்கத்தில் தொழில் புரியும் 200க்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். சங்கக் கிளைகளும் கதவடைப்புச்செய்யப்பட்டிருந்தன.

கடந்த காலத்தில் மேற்படி சங்கத்திலிருந்து ரொக்கமாக 101,285 ரூபா 90 சதமும், பொருள்களாக 86414 ரூபா 40 சதமும், லொறியாக 5,50.000 ரூபாவும் கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

"தமிழ் மக்களின் அவலக் குரல்"

(யாழ்ப்பாணம்)

"அண்மைக்காலத்தில் யாழ் நகரில் வாகனக் கடத்தல்களும் கூட்டுறவு தனிப்பட்ட கொள்ளைகளும் நாளாந்த சம்பவங்களாகிவிட்டன. இவை இயக்கங்களால் நடத்தப்படுகின்றனவா? அல்லது இயக்கங்களின் பெயரைப் பயன்படுத்தி நடத்தப்படுகின்றனவா? என்பது ஒரு பெரிய கேள்விக்குறி தவிர, இவற்றை இயக்கங்களே நடத்துகின்றனவென்னும்போது ஏன் எதற்கு என்ற கேள்விகளுக்குச் சரியான விடையில்லை பொதுமக்களுக்கெதிராக துப்பாக்கிகளை உயர்த்துவது அவற்றை த் தனி நலன்களுக்காக ஏந்துவதும், துப்பாக்கி களையும் போராட்டத்தையும் கேவலப்படுத்துவதாகும் ஆள் கடத்தலில் எந்த அறிவித்தலோ விளக்கமோ குற்றச் சாட்டுக்களோ முன்வைக்கப்படாது போகின்றமை, இது தனிப்பட்ட விரோதங்களா, பழிவாங்கலா என்ற சந்தேகத்தை தடுக்கிறது.

தமிழ் மக்களின் அவலக் குரல்'எனும் தலைப்பில் 'தமிழ் மக்கள்' சார்பில் வெளிவந்துள்ள துண்டுப் பிரசுரத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பிரசுரத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"பொது எதிரியும் போராட்டமும் மறக்கப் பட்டுப் உட்பூசலும் மலிந்து நாம் எங்க போய்க்கொண்டிருக்கிறோம் என்ற ஏக்கத்தை எழுப்பி விடுகிறது இன்று தொழில், உணவு, நடமாட்டம் முதலானவை ஒடுக்கப்பட்டு பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் இத்தகைய சம்பவங்கள் வெந்த புண்ணில் பாய்கின்ற வேலாக வேகமாக வேதனையை வளர்க்கின்றன இயக்கங்கள் என்ன செய்யப் போகின்றன? நிரந்தரவிடுதலை கிடைக்கும்வரை தற்காலிகமாக ஒரு ஒழுங்கு பேணப்பட இயக்கங்கள் அனைத்தும் குறைந்த பட்சம் நிர்வாகமாவது தமக்குள் ஒற்றுமைப்பட்டு அதை அறிவிக்கவேண்டும்"

"விடுதலை இயக்கங்களுக்கு களங்கம்"

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பகுதிகளில் நடை பெற்றுவரும் நகைக்கடை, கூட்டுறவுக்கடை, நிலையங்கள் கொள்ளைகளுக்கும் ஆள்கடத்தலுக்கும், தமது இயக்கத்துக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்று 'தமிழீழ விடுதலை கெரில்லாக்கள்' இயக்கம் விடுத்துள்ள துண்டுப் பிரசுரம் ஒன்றில் மறுப்புத் தெரிவித்துள்ளது.

அப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் விடுதலை இயக்கங்களின் பெயர்கள் களங்கப்படும் விதங்களில் தமிழீழப் பகுதிகளில் நடை பெற்று வரும் நகைக்கடைக் கொள்ளைகள் கூட்டுறவுக்கடைக் கொள்ளைகள், நிலையங்கள் கொள்ளை, ஆள்கடத்தல் முதலியன இடம் பெறுகின்றன.

"தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடும் உண்மையான எந்தவொரு இயக்கமும் இப்படியான செயல்களில் ஈடுபடமாட்ட இப்படியான செயல்களில் ஈடுபடும் நபர்களை, குழுக்களைக் கண்டு பிடிக்க வேண்டியது விடுதலை இயக்கங்களின் கடமையாகும். பொது மக்களும் முடிந்த ஒத்துழைப்பை விடுதலை இயக்கங்களுக்கு அளிக்கும் வண்ணம்கேட்டுக்கொள்கின்றோம்"

இருவர்...

[1-ம்பக்க-5ம்கலத்தொடர்ச்சி]

வாசகர் (40 வயது) என்பவருமே துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கானவர்கள்.

நேற்றுமுன்தினமிரவு 7 மணியளவில் ஒருவர் சைக்கிளில் செல்லும் பொழுதும், மற்றவர் லொறியில் வந்துகொண்டிருந்தபொழுது துப்பாக்கிச்சூட்டுக்கிலக்கானதாகக் கூறப்படுகிறது. [மா]

சட்டத்தரணி...

1ம் பக்க 5ம்கல தொடர்ச்சி)

நேற்று மாலை ஆறு மணியளவில் பல வாகனங்களில் திடீரென வந்தவர்கள் சுமார் பதினைந்து நிமிடநேரம் சோதனை நடத்திவிட்டுச் சென்றனர்.

தேடப்படுபவர் ஒருவரது பெயர் சம்பந்தமாக ஏற்பட்ட தெளிவின்மை காரணமாகவே தான் மேற்படி சம்பவம்நடந்ததாகப் பின்னர் தெரியவந்தது.

ஞானச்சந்திரன்...

(1-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

திட்டமிடல் அதிகாரி தானும் அரசாங்க அதிபருடன் வருவதாகக் கூறியதைத் தொடர்ந்து அந்த நபர்கள்இருவரையும் கடத்திக் கொண்டு சென்றதாகவும் கூறப்படுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் அவரது மகள் கெஞ்சிமன்றாடியும் அவர்கள் அரசாங்க அதிபரைவிடவில்லை என்று கூறப்பட்டது.

இதன் பின்னர் அந்த பஸ் கிளிநொச்சி கச்சேரிக்குச் சென்றது. அங்கு இக்கடத்தல் சம்பவம்பற்றி அரசாங்க அதிபர் என் ஜெயநாதனுக்கும் முறைப்பாடு செய்யப்பட்டது.

இக்கடத்தல் சம்பந்தமாக அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையில், இவ்விரு அதிகாரிகள் சம்பந்தமான தகவல்கள்தெரிந்தால் முல்லைத்தீவு அல்லது கிளிநொச்சி அரசாங்க அதிபர்களுக்கு அறிவிக்கும்படி பொதுமக்களைக் கேட்டுள்ளது

நேற்றிரவு யாழ். அரசாங்க அதிபர் திரு. மு பஞ்சலிங்கத்துடன் 'ஈழநாடு' தொடர்பு கொண்டபோது, முல்லைத்தீவு அரசாங்க அதிபர் குறித்துத் தமக்கு எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லையென்று தெரிவித்தார்.

மாநகரசபை டிராக்டர் கடத்தப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகர சபைக்குச் சொந்தமான ஒரு டிராக்டர் நேற்றுப் பிற்பகல் இனந் தெரியாத சிலரினால் கடத்தப்பட்டது.

டிராக்டருடன் பல தார்ப் பீப்பாக்களும் கடத்தப்பட்டுள்ளன.

இன்று

(பண்டத்தரிப்பு)

சாரணிய இயக்க ஸ்தாபகர் பேடன் பவுல்பிரபுவின் நினைவு தினம் இன்று பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் கொண்டாடப்படுகிறது.

★

(வேலணை)

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவிலின் அறங்காவல்சபையின் பொதுக் கூட்டம் இன்று மாலை நடைபெறுகின்றது.

அவசரகால...

(3ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

எம். பி திரு சரத்முத்தெட்டுவேகம மாத்திரம் இதற்கு எதிராக வாக்களித்தார். ஸ்ரீ. ல. சு. கட்சி மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியன வாக்களிப்பில் கலந்து கொள்ள வில்லை. (கி)

இனப்பிரச்னை...

1-ம்பக்கம் 3ம் கலத்தொடர்ச்சி

இதற்கும் சிங்களவர்கள் இடம் தரவில்லை. இதனையடுத்தே இன்று இனப்பிரச்னை நாட்டில் மோசமடைந்துள்ளது.

"தமிழ் மக்களுக்கான உரிமைகள் தொடர்பாக ஐ.தே.க., த.வி.கூட்டணி ஆகியனவும் ஒப்பந்தமொன்றைத் தயாரித்திருந்தன. ஆனால் அதிலிருந்த வாக்குறுதிகளை ஐ.தே.க. நிறைவேற்றவில்லை" என்றார்.

இந்தியாவுடன் இலங்கை தற்போது ஒரு மறை முகமான யுத்தமொன்றை நடத்துவதாகவும் அவர் குறிப்பிட்டதுடன், இந்தியாவைப் பகைத்துக் கொள்ள கூடாதெனவும் தெரிவித்தார்.

இடையூறின்றி ஜி. ஸி. ஈ...

[1ம்பக்க 1ம்கலத் தொடர்ச்சி]

டத்தில் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளின்நிலைமைகள் பற்றி யாழ், பிரஜைகள் குழுவைச் சேர்ந்த வண. பிதா மைக்கல் சுவாமி எடுத்துச் சொன்னார்.

இக்கூட்டத்தில் முக்கிய பிரமுகர்களாக யாழ். ஆயர் வண. பிதா. தியோகுப்பிள்ளை ஆண்டகை, சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ். மாநகரசபைஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அழைப்பாளர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் இக்கூட்டத்தை நடாத்தினர்.

இணைப்புக்குழு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இவ்விடயத்தில் முக்கிய ஆர்வம் எடுத்துள்ள இளம் தலைமுறையினருக்கு நாம் பெரிதும்கடமைப்பட்டுள்ளோம்.

"இப்பரீட்சை சுமுகமாக நடாத்தப்படுவதற்கு வேண்டிய சகல உதவிகளையும் ஒவ்வொரு பிரஜைகள் குழுவும் செய்யுமாறு வேண்டுகிறோம்.

"அவ்வப் பாடசாலை அபிவிருத்திக்குழுவுடனும் அதிபர்களுடனும் தொடர்புகொண்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

"அத்துடன் இதற்கென நிறுவப்பட்டுள்ள விசேடகுழுக்களுடனும் இணைந்து தொழிற்படுமாறும் வேண்டுகின்றோம்

"இப்பரீட்சைக் காலத்தில் மாணவர்கள் சிரமமின்றிச் சென்று வர வேண்டிய ஒழுங்குகளை நிச்சயப்படுத்துவது இ போ. ச. வினதும் தனியார் போக்குவரத்து வாகன உரிமையாளர்களதும் கடமையாகும்.

"இப்பரீட்சை நடத்தப்படுவதற்குவேண்டிய ஒழுங்குகளைச் செய்யும் பிரதேசக கல்வித் திணைகள அதிகாரிகளுக்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

"அரச அதிபரின் உதவியும் கண்காணிப்பும் இவ்விடயத்தில் அத்தியாவசியமாகும். அவர் தமது பணியைத் திறம்படச்செய்து உதவவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.

"கல்வி முயற்சிகள் எக்காலத்திலும் ஊக்குவிக்கப்படவேண்டியவை. இன்றைய எமது நிலையில் நமது வருங்காலச் சந்ததியினர் இப்பொழுது அனுபவிப்பதுபோன்ற இன்னல்களுக்கு ஆளாகாமல் தகைமையும் தன்னம்பிக்கையும் உடையோராய் வளர்வதற்கு அவர்களின் கல்வியில் எதுவித குறுக்கீடும் இருக்கக்கூடாது.

"குறுக்கீடுகள்நேரின் அவை எதிர்ச் சக்திகளுக்கே உதவியளிப்பதாக நேரும்.

"குறுக்கீடற்ற கல்விதான் நமது குழந்தைகளுக்காக நாம் வழங்கும் செல்வம். இப்பீழ் பரீட்சை சுமுகமாக நடைபெறுவதற்கு வேண்டிய ஆக்கபூர்வமான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வோமாக."

அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினர் தங்கியிருக்கும் முகாம்களுக்கு அருகாமையில் பரம்பரையாக வாழ்ந்துவந்தவர்களை அரசு குடியகற்றுவது குறித்து இக்கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன், குடியகற்றுபவர்களைத் தமிழ்ப் பிரதேசத்தில் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. (மா)

கூடுதல்...

[1ம்பக்கம் 3ம்கலத்தொடர்ச்சி]

மொன்று இவரின் புதிய அலுவலகமாக மாற்றப்பட்டுள்ளது. இங்கு நேற்று விமான, இராணுவ, கடற்படையினர் தளபதி வீரதுங்காவுக்கு அணிவகுப்பு மரியாதை அளித்துக் கௌரவித்தனர்.

முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், மற்றும் சிரேஷ்ட பாதுகாப்புச் சேவை அதிகாரிகள் ஆகியோர் இக்கடமையேற்பு வைபவத்தில் நேற்றுக் கலந்துகொண்டனர்.

லெப்டினன்ட் ஜெனரல் வீரதுங்காவின் புதிய பணியகம் 'முப்படைகளினதும் மத்திய அதிகார பீடம்' என்று அழைக்கப்படும்.

இலங்கை இராணுவச்சேவையில் தளபதியொருவருக்கு இத்தகைய கூடுதல் அதிகரம் வழங்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். (கி)

தலைமன்னார்...

(1ம் பக்க 4ம்கலத்தொடர்ச்சி)

செய்யப்பட்டு வருகின்றன. தாயகம் திரும்புவோருக்கு கொழும்புத் துறைமுகத்தில் தங்குவதற்கும் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. (சு)

வாகனத்தை...

(1-ம்பக்க 1ம்கலத் தொடர்ச்சி)

வாகன வசதி தட்டுப்பாடான இக் காலகட்டத்தில் பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சேவை இப்போது தடைப்பட்டுள்ளது. ஆகவே இத்தாபனத்திற்குரிய மேற்படி ஒரே ஒரு வாகனத்தைத் திருப்பி ஒப்படைக்க முன்வர வேண்டும் என்று ஸ்தாபனத்தின் பொது முகாமையாளர்விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் நிதாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tle phone um 22nber389-24126.

மரண அறிவித்தல்

திருமதி இரத்தினேஸ்வரி பொன்னுத்துரை

வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த இரத்தினேஸ்வரி பொன்னுத்துரை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முதலியார் செல்லப்பாவின் அன்பு மகளும், கௌரி (Teacher), ரோஹினி (Peoples Bank), மாலினி (America), ஷாந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீகாந்தா (Savoy Theatre) சிவானந்தன் (Home Finance), டேவிட் டொமினி (America) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 19 ஒடை லேன் இல்லத்தில்நடைபெற்றுபூதவுடல்தகனக் கிரியைகளுக்காக இன்று சனிக்கிழமை (23-2-85) நண்பகல் 12 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும். தகவல்—பிள்ளைகள். 1973